★ விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 ஐப்பசி 11 முஹறம் 21 இதழ் 257
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-10-83

## "இலங்கைக்கு இராணுவம்: கோரிக்கையில் நியாயமில்லை"

### தமிழக சட்டசபையில் எம். ஜி. ஆர்.

சென்னை, அக். 27

''இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் தமிழர் பிரச்னை தொடர்பாக இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பும்படி கோரவில்லை. இலங்கைக்குப் படையை அங்கு இடம்பெற்ற கலவரங்களை அடக்குவதற்கு அனுப்புவதா? அல்லது தனி நாடு பெற்றுக்கொடுப்பதற்கு அனுப்புவதா? என்பதுபற்றியும் தமிழ்த் தலைவர்கள் எதுவும் விளக்கமாகக்கூறவில்லை''.

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுத் தமிழ்நாடு சட்டப் பேரவையில் இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''இலங்கைத் தமிழர்பிரச்னை தொடர்பாக அங்கு இந்திய இராணுவத்தை அனுப்பவேண்டும் என்று சில தமிழ் நாட்டுக் கட்சிகள் விடுத்த கோரிக்கை

(8ம். பக்கம் பார்க்க)

## ★ இலங்கைத் தமிழர் பிரச்னை:

# ஜனுதிபதிக்கு தொண்டமான் நிலைமையை விளக்கினுர்

### பார்த்தசாரதி மீண்டும் வருவார்

(கொழும்பு)

**கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் நேற்று ஜனுதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனுவைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றி கலந்துரையாடினுர்.**

இச் சந்திப்பின்போது திரு. தொண்டமான் இந்தியத் தலைவர்களுடனும், தமிழ்நாடு அரசியல் கட்சித் தலைவர்களுடனும், இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாகத் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி ஜனுதிபதி திரு. ஜெயவர்த்தனுவிற்கு விளக்கிக் கூறினுர்.

இச்சந்திப்பின்போது தமிழர் பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியை மீண்டும் கொழும்புக்கு அழைக்கப்போவதாகவும் ஜனுதிபதி ஜெயவர்த்தனு அமைச்சர் தொண்டமானிடம் தெரிவித்தார்.

ஆனுலும் திரு பார்த்தசாரதி பேச்சுவார்த்தைக்காக எப்போதுகொழும்புக்கு அழைக்கப்படுவார் என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இச் சந்திப்பு 30 நிமிடங்கள் வரை இடம்பெற்றது. (வெ)

### நாடுமுழுவதும் 2மணித்தியால மின்வெட்டு

(கொழும்பு)

நாட்டில் நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக அடுத்த மாதம் 1ம் திகதி முதல் நாடு முழுவதும் 2மணித்தியால மின் வெட்டு அமுல்செய்யப்படுமென்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் யாழ். மாவட்டத்தில் சுன்னுகம் மின்சார நிலையம் காலை 8 மணி முதல்

[8ம் பக்கம் பார்க்க]

## மார்வை சேனுதிராசா விடுதலை!

[யாழ்ப்பாணம்]

இளைஞர்பேரவை அமைப்பாளர் திரு. மாவைசேனுதிராசா விடுதலைசெய்யப்பட்டுள்ளார். நேற்று அவர் யாழ். திரும்பினுர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இரண்டாவது மகன் அனுப்பிய கடிதம், இரகசிய பொலிஸாரிடம் சிக்

(8-ம் பக்கம் பார்க்க)

### மன்னுர் கடலில் நிறுத்தப்பட்டிருந்த

## இழுவைப் படகைக் கடத்தி இராமேஸ்வரம் சென்றனராம்

### கடற்பகுதியில் முப்படை ரோந்து

(மன்னுர்)

'பிளாஸ்ரிக்' வள்ளம் ஒன்றில் துப்பாகி சகிதம் வந்த பதினைந்து இனம் தெரியாத நபர்கள், மன்னுர் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நவீன இழுவைப் படகொன்றைக் கடத்திக்கொண்டு இராமேஸ்வரம் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் திங்கட்கிழமை இரவு மன்னுரில் இடம்பெற்றது. 'பேசாலை ஒஸ்மன்' தொழிற்சாலைக்குச் சொந்தமான பத்துலட்சம்ரூபா பெறுமதியான இழுவைப்படகே கடத்தப் பட்டதாகும்.

சம்பவதினம் துப்பாக்கி, கிறிஸ்கத்தி ஆகியவை சகிதம் பிளாஸ்ரிக் வள்ளத்தில் வந்த 15 இனம் தெரியாத நபர்கள் மன்னுர் கடலில் நிறுத்தி வைக்

(8ம்-ம் பக்கம் பார்க்க)

### யாழ். அரசாங்க அதிபரின்

## அவசரக் கோரிக்கை மீது உணவுக் கப்பல் வந்தது

### கூட்டுறவுச் சங்க லொறிகளுக்கு நேரடியாக விநியோகம்

(மாவிட்டபுரம்)

மா, சீனி ஆகிய உணவுப் பொருட்களுடன் ''எம். வி. மோர்க் செறன்டிப்'' என்னும் கப்பல் நேற்றிரவு காங்கேசன்துறை லங்கா சிமெந்துதுறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

வடபகுதி உணவுக்களஞ்சியங்களில் போதியளவு உணவுப் பொருட்கள் கையிருப்பில் இல்லாதகாரணத்தினுல் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா விடுத்த அவசரவேண்டுகோளைத்தொடர்ந்து உணவு இலாகாவினர் இரண்டாயிரத்து ஐநூறு மூடைகள் சீனியுடனும், பத்தாயிரம் மூடைகள் மாவுடனும் இக்கப்பலை வடபகுதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

வட பகுதியில் உணவுப் பொருட்களின் தட்டுப் பாடு

(8ம் பக்கம் பார்க்க)

### தி. மு. க. நிலை: விளக்கம்

சென்னை, அக். 27

''தி.மு.க. தனிநாடு கோரிக்கையை இலங்கைத் தமிழர்கள் மீது திணிக்கவில்லை. அங்கு ஏற்பட்ட சூழ்நிலைகள் காரணமாகவே இலங்கைத் தமிழ் மக்கள் தனிநாடு கோரிவருகிருர்கள்''.

இவ்வாறு தமிழ்நாடு சட்டப் பேரவையில் இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது உரையாற்றிய தி.மு. க. உறுப்பினர் திரு கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். (வெ)

### யாழ். ஜூலை வன்செயல்கள்:

## பலியானேர் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்குக!

### ஜனுதிபதிக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஜூலை 24-ம், 25-ம் திகதிகளில் ஆயுதந்தாங்கிய சீருடையணிந்த சிலரின் தாக்குதலுக்கு பலியானவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி நிவாரணம் வழங்குமாறு யாழ். பிரஜைகள் குழு ஜனுதிபதியிடம் கோரியுள்ளது.

யாழ். பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் டபிள்யூ. எல். ஜெயசிங்கம், செயலாளர் திரு.ஆர். பாலசுப்பிரமணியம், ஆகியோர் ஜனுதிபதி

(8ம் பக்கம் பார்க்க)

ஏல விற்பனை

மீன் பிடி வள்ளம்

இலக்கம் 1 யீ 5048 யா கொண்ட 28 அடி இயந்திர வள்ளமும் இலக்கம் பீ எம் ஜே / 0249 கொண்ட யன்மார் 30 எச். பீ. இயந்திரமும் 7-11-83ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு குருநகர் கடற்கரையில் குருநகர் கடற்ருெழில் அபிவிருத்திச் சங்கத்தின் டீசல் விற்பனை நிலையத்திற்கு முன்பாக வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இவ்வள்ளம் மேற்படி இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச முகாமையாளர்,
பிரதேச தலைமை அலுவலகம்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம். 9298

இன்று ஆரம்பம்
DAY CLASS
84 AUG. A/L விஞ்ஞானம்

MASTER INSTITUTES
B. M C.LANE, JAFFNA.
(9555)

# வரி விளம்பரம்

## கல்வி

உயர்தரம் 1985 வார இறுதி வகுப்புகள் விஞ்ஞானப் பட்டதாரிகளினல் 29-10-1983 (சனிக்கிழமை) ஆரம்பிக்கப்படும். காலை 8-45 இரசாயனம் (திரு இளவழகனுர்), 9-45— அட்சரகணிதம் (திரு. சிவாதுரை), 11-00-பௌதிகம் (திரு. பாலச்சந்திரன்), 12-00- காவிகள் (திரு. சிவாதுரை) The Jaffna Education Centre, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சாந்திசினிமாவிற்கு அண்மை) 9526

Radio and Electronic Engineering (Trade Course) by K. Ceylonmoney Electronic Engineer Peradeniya Campus உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, பொறியியல் கல்வி நிலையம், யாழ்ப்பாண கல்வி நிலைய கட்டிடம், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 9518

## சேவை

திருமணம் மற்றும் சகல விதமான வைபவங்களுக்கும் சிறந்த முறையில் வீடியோ (T V) யிலும் புகைப்படத்திலும் படம்பிடிக்க கொழும்பில் பிரபல்யமான தர்மாஸ் ஸ்ருடியோவை நாடுங்கள் 50, விதானையார் வீதி- சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23379. (9233)

## வகுப்புகள்

Pitman Shorthand and Typing (ENGLISH) வகுப்புகள் 02-11-1983 (புதன்) ஆரம்பமாகவுள்ளது. The Jaffna Education Centre, இராமையா செட்டியார் ஒழுங்கை, (ஆஸ்ப்பத்திரி வீதிக் கிளை) யாழ்ப்பாணம். (சாந்தி சினிமாவிற்கு அண்மை) 9525

## விற்பனைக்கு

யாழ். நகரில்- ஆட்டுகல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுகல் முதலியன கிடைக்குமிடம் S. S அபூபக்கர் அன்கோ, 112, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 9506

யாழ். மணிக்கூட்டு வீதி, B.M.C க்கு முன்பாக 1பரப்பு 3 குளிக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9535

ஆனைக்கோட்டைக்கும் ஆறுகால் மடத்திற்கும் இடையில் கொக்குவில் போகும் ரேட்டில் பிடாரி கோவில் உபதபால் நிலையத்திற்கு அருகில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு உகந்தநிலம். விபரங்களுக்கு: நாதன் ரெக்ஸ் ரைல்ஸ், 179, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23691. (9503)

Sharp Microwave Oven, Sharp Three in One Technics Hifi Units Washing Machine மற்றும் பல சாமான்கள் விற்பனைக்குண்டு. சனிக்கிழமை காலை 10 மணியிலிருந்து பார்வையிடலாம். 6, நல்லூர் குறுக்தெரு, யாழ்ப்பாணம். 9515

## தேவை

மாவடி ஞானவயிரவ கோவிலுக்கு 3 கால பூசை செய்வதற்கு ஒழுக்கம் பண்புள்ள குருக்கள் நேரில் வரவும். S. முத்துக்குமாரு சன்ஸ், 175, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம். 9541

பிள்ளைகள் விடுதி ஒன்றில் சமையல் வேலை செய்ய நடுத்தர வயதுள்ள பெண் உடன் தேவை. குடும்பப் பொறுப்பற்றவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். Warden, House of Hope, Inuvil. 9540

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/- ரூபாவுக்கு மேற்பட்ட பல விலைகளில் கோழிகளை நேரடியாக வந்து கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், Phone: 23131. (9551)

## வாடகைக்கு

சுண்டிக்குளியில் நல்ல சுற்றுடலில் முழு வீடும் 'அனெக்ஸும்' கட்டிடம் ஓரளவு பூர்த்திசெய்யப்பட்ட நிலையில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. பாடசாலைகள், கச்சேரி தபாற்கந்தோர், பஸ் நிலையம் ஆகியவை மிகவும் சமீபமாக அமைந்துள்ளன. கட்டிமுடிப்பதற்கு முற்பணம் தேவை. விபரம்: வேதநாயகம், 11, கச்சேரி நல்லூர் வீதி (சுண்டிக்குளி தபாற்கந்தோருக்குப் பின்புறமாக.) 9501

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

## தவறிவிட்டது

21-10-83 மணிக்கூட்டு வீதிக்கும் கன்னதிட்டி வீதிக்கும் இடையில் எனது அடையாள அட்டை (550542706 V) மணிபர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து தகவல் தரவும். கோ.மோகனதாஸ், 3, அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம். 9550

## முக்கிய அறிவித்தல் மின்விநியோகம்

1983ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00மணி வரை முக்கியபராமரிப்பு வேலைகள்செய்யும்பொருட்டு அனுராதபுரம்-யாழ்ப்பாணம் 132 கே. வி. மின்மார்க்கம் தடைசெய்ய விருப்பதால் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, சுன்னகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ். பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத் தருகின்றேன்.

மின்பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னகம்.

9544

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### கட்டிடம் வாடகைக்கு விடல்

இல: 127, கே. கே. எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் முதலாம் மாடியில் 3000 சதுர அடி பரப்புள்ள இடம் வாடகைக்கு உண்டு. அதை முழுமையாகவோ அல்லது 750 சதுர அடி கொண்ட துண்டுகளாகவோ வாடகைக்கு எடுக்க விரும்புவோர் சங்கக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 7- 11- 83.

பதில் பொதுமுகாமையாளர்
127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
26- 10- 83. 9560

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### கேள்வி விளம்பரம்

**1. வெற்றுச்சாக்குகள்:**

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 3314 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபால் மூலம் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்குக் கேள்வி'' என எழுதப்பட்டு, சீல் வைக்கப்பட்டு ''பொது முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**2. அலுமினிய வெற்றுக் கோண்கள்:**

அலுமினியத்தாலான வெற்றுக் கோண்கள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்பங்கள் ஒரு கிலோவிற்கான விலை குறிப்பிட்டு, இடது பக்க மூலையில் ''அலுமினிய வெற்றுக்கோண் கேள்வி'' என எழுதப்பட்டுச் சீல் வைக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் முடிவுத் திகதி:- 3- 11- 83

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ சங்கம்,
சங்கானை.
26- 10- 83. 9552

## யாருடையது

(கோண்டாவில்)

கோண்டாவில் ரயில் நிலைய வீதியில் திரு எஸ். சூரியகுமாரினல் கண்டெடுக்கப்பட்ட, சிறு தொகைப் பணத்துடன் கூடிய மணிபர்ஸ் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளலாம்.

## நல்ல வீடு விற்பனைக்கு உண்டு

திருநெல்வேலியில் ஒன்றேகால் பரப்பில், நீர், மின்சார வசதிகளுடன் நான்கு அறைகள் கொண்ட நவீன முறையில் அமைக்கப்பட்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு:

10/7, சிவன்கோவில் வீதி,
திருநெல்வேலி.

9545

பொதுமக்களுக்கும்,
வர்த்தகப் பெருமக்களுக்கும்
பயன்தரக்கூடிய நல்ல பல சேவைகளை
நாணயத்துடன் அளித்துவரும்

## மல்ரி சேவிசஸ்

தாபனத்தார்,

மாணவ மாணவியர்களும்,
அலுவலகங்களில் பணி புரிபவர்களும்,
அயல்நாடு செல்லவிருப்பவர்களும்,
அறிவை விருத்தி செய்ய ஆசைப்படுபவர்களும்,
பிரயாணச் செலவையும்,
போக்குவரத்து நெரிசலையும்,
போதிய நேரமின்மையையும்,
தவிர்த்து —
வீட்டில் இருந்தபடியே,
வேண்டிய நேரத்தில்,
மிக இலகுவான முறையில்,
குறுகிய காலத்திற்குள்,
ஆங்கிலம் படித்துப் பயனடையக்கூடிய வகையில்,
விரைவில் ஆரம்பிக்கவிருக்கும்
மற்றுமோர் சேவைதான் —

**அஞ்சல்வழி ஆங்கிலம்.**

விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவத்திற்கும், எழுதவேண்டிய முகவரி:-

## மல்ரி சேவிசஸ்

37 (351) மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(9561)

## கட்டடப் பொறியியல் வகுப்புகள்

| | சனி | ஞாயிறு |
|---|---|---|
| QUANTITY SURVEYING [FOR 1984 MAY/JUNE CITY and GUILDS OF LONDON EXAMINATION] | 8-30 — 10-30 | 5-00 — 7-00 |
| DRAUGHTSMAN SHIP (CIVIL) BUILDING CONSTRUCTION | 11-00 — 1-00 | 2-30 — 4-30 |
| STRUCTURAL ENGINEERING | 2-00 — 4-00 | |

## KEEN INSTITUTE

மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# கிரனடாவில் போர் நீடிக்கிறது வெள்ளைமாளிகை அறிவிப்பு!

## பெரும் ஆயுதங்களை பாவிக்கமுடியாத நிலை!

சென்ஜோர்ஜ், அக். 27, கரீபியன் கடலிலுள்ள கிரனடா தீவில் கியூபாபடைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்குமிடையே பலத்த மோதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

கிரனடாவிலுள்ள கியூபா தூதரகம் தமது நாட்டுப்படைகள் போரைமுடித்துக் கொண்டன வென்றும் தமது தரப்பில் ஆறுவீரர்கள் மட்டுமே கொல்லப்பட்டனர் என்றும் அறிவித்துள்ளது. ஆனால் வாஷிங்டனில் வெள்ளைமாளிகை தொடர்ந்தும் கிரனடாவில் போர் நடப்பதாகவும் 12 அல்லது 20 கியூபா வீரர்கள் கொல்லப்பட்டுள்ள னரென்றும் அறிவித்துள்ளது.

அமெரிக்க இழப்புப்பற்றி வெள்ளைமாளிகை தெரிவிக்கையில் 6 வீரர்கள் கொல்லப்பட்டனரென்றும் 42 பேர் காயமடைந்தன ரென்றும் 8 பேரைக் காணவில்லை யென்றும் அறிவித்தது. அத்துடன் கிரனடாவிலிருந்து அமெரிக்க விமானங்கள் அமெரிக்கர்களை ஏற்றி வருகின்றன வென்றும், முதலாவது விமானம் 61 பேருடன் புறப்பட்டு விட்டதென்றும் தெரிவித்தது. கிரனடாவில் சுமார் ஆயிரம் அமெரிக்கர்கள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரிட்டனும் கிரனடாவிலுள்ள அதன் பிரஜைகள் குறித்து கவனஞ் செலுத்தியுள்ளது. பிரிட்டனின் விசேட குழுவொன்று நேற்று கிரனடாவுக்கு அதன் பிரஜைகள் பற்றி அறிந்து கொள்ள வந்து சேர்ந்தது

கிரனடாதீவு மிகவும் சிறியது இதன் விஸ்தீரணம் 133 சதுர மைல்களாகும். குடித்தொகை ஒரு லட்சத்து ஒன்பதினுயிரமாகும் கொக்கோ, வாழைப் பழைச்செய்கை, மீன்பிடி ஆகியவற்றிலேயே இத்தீவுக்கு வருமானம் கிடைத்து வருகிறது

கிரனடாதீவில் நடந்துவரும் சண்டையில் அமெரிக்காவோ, அல்லது அதன் எதிரிப்படைகளோ பெரியளவில் ஆயுதங்களை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. ஏனெனில் அத்தீவு மிகவும் சிறியது. ஆகையால் ஏவுகணைகளை படைத்தளங்களுக்குச் செலுத்தினுலோ அல்லது பீரங்கிகளால் எதிர்த்தாலோ துருப்புகளுடன் பொதுமக்களும் பெருமளவில் பாதிப்படைவர். அத்துடன் விளைநிலங்களும் பாதிப்படையும். ஆகையினுல் இங்குள்ள படைகள் சிறியரக ஆயுதங்களையே பாவிக்கும் நிலை காணப்படுகிறது. (கி)

## பாகிஸ்தானில் தொழிலாளர் பெரும் ஆர்ப்பாட்டம்!

### 50 பேர் கைது!

லாகூர், அக். 27 பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத் தலைநகரான லாகூரில் பாக். இராணுவ ஆட்சிக்கெதிராகப் பெருமளவில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர். இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை பத்தாயிரம் என மதிப்பிடப்பட்டது.

ரயில்வேப் பகுதி ஊழியர்கள் உட்பட தொழிற்சாலைகளைச் சேர்ந்த ஊழியர்கள் இதில் பெருமளவில் கலந்து கொண்டனர். தொழிலாளர்கள் இவ்வாறு சேர்ந்துகொண்டது இதுவே முதல் தடவை என்று அறிவிக்கப்பட்டது.

இப்பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப் பிரயோகம், தடியடிப்பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களும் பொலிசாருடன் மோதினர். இதனையடுத்து 350 பேர் கைதானுர்கள். (கி)

ஆயுதப் பயிற்சி தடைச்சட்டம்

## தமிழ்நாட்டு சட்டசபையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

சென்னை அக் 27 தமிழ்நாட்டில் ஆயுதப் பயிற்சி செய்தல், சுவரொட்டிகள் ஒட்டுதல் போன்ற நடவடிக்கைகளை தடைசெய்யும் சட்டமூல விவாதத்தில் 6 எதிர்க்கட்சிகள் தமிழ்நாடு சட்ட சபையிலிருந்து வெளி நடப்புச் செய்தன.

எதிர்கட்சிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையெனக் கூறியே இந்தக்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன.

தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட்கட்சி இந்திய மார்க்ஸிய கட்சி ஜனதா, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் முஸ்லிம் லீக் ஆகியவையே வெளி நடப்புச் செய்த கட்சிகளாகும். (சூ)

## கிரனடா விவகாரம்

## ஐ.நா.வில் நாடுகள் பலத்தகண்டனம்!

நியுயோர்க், அக் 27 கிரனடாவில் அமெரிக்கப் படையெடுப்புப்பற்றி நியுயோர்க் ஐ. நா. சபையில் நிக்கரகுவா, கயானு ஆகியன உட்பட அணிசேரா நாடுகள் சார்பில் இந்தியாவும் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியா சார்பில் அதன் நிரந்தர ஐ. நா. பிரதிநிதி திரு. என். கிருஷ்ணன் கிரனடாவில் படையெடுப்புக் குறித்துக் கண்டனம் தெரிவித்தார். 'அணிசேரா இயக்கநாடுகளை இப்படையெடுப்பு அச்சுறுத்துகின்றது. எனவேஅமெரிக்கா அதன் துருப்புகளை உடனடியாக கிரனடாவிலிருந்து வாபஸ்பெற வேண்டும்' என்று கூறினுர்.

அமெரிக்கா கிரனடாவை ஆக்கிரமித்தது குறித்து உலகின் பல பாகங்களிலும்பலத்த எதிர்ப்புகள் கிளம்பிவருக்கின்றன. சில நாடுகளில் எதிர்ப்பு ஊர்வலங்களும் நடத்தப்பட்டன.

வியட்னும் யுத்தத்தின்பின்னர் அமெரிக்காவினுல் மேற்கொள்ளப்பட்ட பெரும்படையெடுப்பு இதுவென்று தெரிவிக்கப்பட்டது (கி)

## ஜோர்தான் தூதுவர்

### சுகமடைந்து வருகிருர்

(புதுடில்லி) புதுடில்லியில் நேற்று முன் தினம் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஜோர்தான் தூதுவர் சுகமடைந்து வருவதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுடில்லி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் சூடான் தூதுவர் என முன்னர் வெளி வந்த செய்தி தவருனதாகும்.

இதற்கிடையில் மற்றெரு ஜோர்தான் தூதுவர் இத்தாலியில் சுட்டுக் காயப்படுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவத்தின் போது இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். (சூ)

## அக்டோபர் மாதச்சம்பளம் கிடைக்க ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்) அக்டோபர் மாதச் சம்பளத்தைஇதுவரைபெருத அரச கூட்டுத்தாபன ஊழியருக்கு அச்சம்பளத்தை வழங்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நடவடிககை எடுத்து வருகிருர்.

அத்தியாவசிய சேவைகள் நாயகதிணைக்கள உயர்அதிகாரி திரு எஸ். சிவானந்தம் யாழ் அரசாங்க செயலகத்தில்நடந்த சந்திப்பின் போது மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட அரசகூட்டுத் தாபன ஊழியர் இணைப்புக்குழு தலைவர் திரு கே.ராஜசிங்கம், உபதலைவர் திரு ஆறுமுகம் ஆகியோர் நேற்று முன்தினம் திரு சிவானந்தத்தைச் சந்தித்துப் பேசினுர்கள்.

திரு சிவானந்தம் மேலும் தெரிவித்ததாவது: அக்டோபர் மாதச் சம்பளத்தை பெருத ஊழியர்கள் உடனடியாக அக்டோபர் மாதச் சம்பளத்தை வழங்குமாறு தங்கள் திணைக்களத்திற்கு கடிதமெழுத வேண்டும். அக்கடிதத்தின் பிரதியை அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு சகல உதவிகளும் செய்ய அத்தியாவசிய சேவைகள் நாயகம் நடவடிக்கை எடுத்து வருகின்ருர். (க)

## உயர்வகுப்பு மாணவர்வரவு: கல்விஇலாகா நடவடிக்கை

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் உயர் வகுப்பு மாணவர்களின் வரவு பற்றிய விபரத்தை கல்வி இலாகா சேகரித்து வருகிறது.

சகல பாடசாலை அதிபர்களும், உயர் வகுப்பு மாணவர்கள் வரவு பற்றிய விபரத்தை தயாரித்து கல்வி இலாகாவுக்கு அனுப்பிவைத்துள்ளனர்,

கடந்த ஜுலை மாதம் முதல் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்), ஜி. ஸி. ஈ, உயர்தரம்) மீட்டல் வகுப்பு ஆகியவற்றிற்கு ஒழுங்காக வந்த மாணவர்கள் திருப்திகரமற்ற முறையில் வந்த மாணவர்கள், வராத மாணவர்கள் விபரங்கள் அதிபர்களால் அனுப்பப்பட்டுள்ளது. (க)

## இரகசிய பொலிஸும் கவனிக்கிறது

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கல்லூரிகளிலும் உயர் வகுப்பு பயிலும் மாணவர்களின் வரவு விபரத்தை இரகசியப் பொலிஸார் திரட்டி வருகிருர்கள்.

ஜி ஸி ஈ. (சாதாரணம்) ஜி. ஸி. ஈ. (உயர் வகுப்பு) மீட்டல் வகுப்பு ஆகியவற்றில் பயின்ற மாணவர்களில் செப்டம்பர் மாதமும், அதற்குப் பின்னரும் வகுப்புகளுக்கு வராதவர்கள் திருப்தியற்ற முறையில் வந்தவர்கள் பற்றி விபரம் திரட்டப்படுகிறது.

மேலிடத்து உத்தரவைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது,

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளில் கடந்த 3 தினங்களாக இரகசியப் பொலிஸார் உயர் வகுப்பு மாணவர் வரவு பற்றி விபரங்களையும் பெயர், விலாசங்களையும் சேகரித்து வருவவாகக் கூறப்படுகிறது (க)

## சைக்கிளைவிட்டு திருடர்கள் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்) நள்ளிரவில் கடையொன்றினுள் புகுந்த திருடர்கள் பக்கத்து வீட்டார் கூக்குரலிடவே தமது சைக்கிளையும் விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

யாழ் நகரில் இலுப்பையடிச் சந்தியிலுள்ள கடை ஒன்றினுள் நள்ளிரவில் சிலர் இருப்பதைக் கண்டு சந்தேகப்பட்ட பக்கத்து வீட்டுக்காரர் கூக்குரலிடவே திருடர்கள் தாம் கொண்டுவந்த புதிய சைக்கிள், அலவாங்கு, டோர்ச்லைற் ஆகியவற்றை விட்டு தப்பி ஓடிவிட்டதாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது

கடை உரிமையாளரான பொ. சதாசிவம் என்பவர் இதுதொடர்பாக புகார்செய்துள்ளார். பொலிசார் விசாரணைசெய்து வருகின் றனர் [கு]

வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)

GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154

## மணிவாக்கு

எந்த ஒரு நல்லியக்கமும் ஐந்து கட்டங்களைத் தாண்டவேண்டியிருக்கும்; சோர்வு, ஏளனம், வசைபாடும் கண்டனம், அடக்கி ஒடுக்கப்படல், மதிப்பு.

— மகாத்மாகாந்தி

# நமதுநோக்கு

## கிரனடாவில் அமெரிக்க கரீபியன் நாடகம்

தென்கொரிய விமானம் ரஷ்யாவில் சுடப்பட்டபோது 269 பேர் பலியாகினர். அமெரிக்காவில் துக்க தினம் அனுட்டிக்கப்பட்டது.

ரங்கூன் படுகொலையில் நான்கு தென்கொரிய அமைச்சர்கள் உட்பட 21 பேர் குண்டுவெடிப்பில் உயிரிழந்தனர். நட்பு நாடென்ற காரணத்தால் இலங்கையிலும் அரசாங்க கூட்டுத்தாபன கட்டிடங்களில் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறந்தது.

அடுத்தது லெபனானில் திரும்பவும் இடம்பெற்ற அட்டூழியங்களும் கொலைகளும்.

இவற்றிற்கு ஒரு முடி சூட்டிய சம்பவமே கிரனடாவின் இடதுசாரிப் பிரதமர் மொறிஸ் பிஷப்பின்கொலை.

இந்தக்கொலை இன்று இச்சிறுதீவில் நடைபெறும் ராணுவ நாடகத்துக்கு வழிவகுத்திருக்கிறது.

எங்கும் ரஷ்ய ராணுவ தலையீட்டை எதிர்பார்க்கும் ஜனாதிபதி றீகனுக்கு கிரனடாகிளர்ச்சி நல்லொரு சாட்டாய் விட்டது.

அருமந்த ஆயிரம் அமெரிக்க உயிர்கள் அங்கு வாழ்கின்றனர்; அவர்களை இந்த உலகின் முதலாவது பெருஞ் செல்வம் செல்வாக்குள்ள நாடு அவர்களில் ஒருவரானாலும் பலியாவதை பார்த்துக் கொண்டிருக்குமா?

எல்லா உயிர்களும் ஒரு தரத்தவையல்ல என்பதை எங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் விளக்கத் தேவையில்லை.

சாதி, இன, மொழி, மத வேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் ஒரே மாதிரியான உரிமைகள் இந்நாட்டில் அளி(ழி)க்கப்பட்டுள்ளனஎன்ற சங்கநாதம்அடிக்கடி ஊதப்படும் போதும் அது தமிழ் மக்கள் செவியில் 'ம'வ்வளவாகவே (ழ) ஒலிக்கின்றது.

எனவே செல்வச்செருக்கு, அதிகாரச் செருக்கு, இன வெறி மொழி வெறி, மத வெறி சமநோக்குக்குக்கட்டுப்படாது.

அப்பாவி அமெரிக்க மக்களைப் பாதுகாக்க ஜனாதிபதி றீகன் கிரனடாவிற்குதமது படைகளை அனுப்பியதும், அங்கு நிலைபெறக் கூடிய அராஜகத்தை அகற்றி நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்ட எத்தனிப்பதும் முதலைக் கண்ணீரென்று அவருடைய ஆப்த நண்பி திருமதி மார்கிறற் தாட்சரே கூறியிருக்கிறார்.

அப்கானிஸ்தானில் ரஷ்யாவின் ராணுவ தலையீட்டை இன்று வரைக்கும் கண்டித்து உலக மேடைகள் அனைத்திலும் பகிரங்கமாக வசைபேசி வந்த றீகன் தம்முடைய ஆக்கிரமிப்பு நியாயமான தென்பதை எந்த வேதவாக்கியம் கொண்டு நிலைநாட்டுவார்!

இ[illegible]னல் உ[illegible]க்கு [illegible]ற்படக்கூடிய ஆபாயங்கள் பாரதூரமானவை; அதை உலகுமே ஒருநாடகமென்ற பேருண்மையை நடிகராகக் கண்டு அனுபவித்த ஜனாதிபதி றீகன் அடுத்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலையும் மறந்திருக்க மாட்டார்.

அரசியலில், தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பிழையான வழிகளைக்கையாளுவதில் முதலாவதாக ஈடுபட்டவர் ஜனாதிபதி றீகன் என்று எவரும் சொல்ல மாட்டார்; அவருக்கு முன் பலர் அவ்வித ஞானமற்ற செயல்களால் உயிரையே இழந்ததும், இழக்கும் பேராபத்தில் இருப்பதும், தம் அதிகாரத்தை எதிர்பாராத வகையில் பறிகொடுத்ததும் உலகவரலாறு நாடக பாணியில் எடுத்துரைக்கிறது.

கிரனடாவில் கியூபன் ராணுவ ஆலோசகர்கள், கட்டிடதொழிலாளர்கள் சோவியத் ராணுவ ஆலோசகர்கள்கூட இன்று இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் அமெரிக்க படையில் சிக்கிக்கொண்டதாகச் செய்தி. கியூபன் உயிர்கள் சில கொல்லப்பட்டதாகவும் செய்தி.

கியூபா போர் தொடுக்குமாயின் என்ன நடைபெறலாம்?

ஐந்து நிமிடத்தில் பிரிட்டனை, மேற்குஜெர்மனியை நிர்மூலமாக்கும் ஏவுகணைகளை செக்கோசிலவாக்கியாவிலும் கிழக்கு ஜெர்மனியிலும் நிறுவ சோவியத் யூனியன் தீர்மானித்துள்ளது.

எங்கள் நாடு இந்த சர்வதேச அமர்க்களத்தில் அகப்படுமாயின் இன்று ஆளிருந்தும் நடைபெறாத இரண்டு நிமிட மௌன அஞ்சலி பின்பு நடைபெறுவற்கு ஆளிராதென உணர்க.

# வடமுனை

## மனம் போன போக்கில் காணிகளைப் பிரித்தனர்!

**பா. அனந்தகிருஷ்ணன்**


வடமுனையில் அத்துமீறிப் பிரவேசித்ததும் வண. திம்புலாகல தேரோவும் அவருடன் வந்தவர்களும் தமது மனம் போன போக்கில் அங்கு காணிகளை தமக்கெனப்

[2]

பிரித்துக் கொண்டனர்! வடமுனைப் பகுதியில் தான்தோன்றித் தனமாக இந்த அத்துமீறல் நடந்த ஒருசில வாரங்களில் பெரும் பதட்டநிலை உருவாகியது.

### ஆக்கிரமிப்பு

புதியவர்கள் ஏற்கனவே அங்கிருந்தவர்களை பயமுறுத்தும் நடவடிக்கைகளில் இறங்கினர். வடமுனை குளத்தின் நீரைத் திறந்து மூடும் துறப்பணக் கருவியையும் தம்கட்டுப்பாட்டின் கீழ் அவர்கள் கொண்டு வந்தனர். இதனால் அங்கு ஏற்கனவே குடியிருந்து இவ்வருட பெரும்போகத்துக்கு நிலத்தை தயார் செய்து கொண்டிருந்தவர்கள் பீதி கொண்டு நிலமற்றவர்களாக அங்கிருந்தும் வெளியேறினர்.



## தேவா குடியேற்றியவர்கள் வெளியேறினர்கள்!

இவ்வாறு வெளியேறியவர்களின் எண்ணிக்கை சுமார் 100 குடும்பங்களுக்குமதிகமாகும், இத் தொகையினரில் இந்திய வம்சாவளித் தமிழர்களும் அடங்குகின்றனர். இவர்களை கல்குடாத் தொகுதி உறுப்பினரான அமைச்சர் தேவநாயகமே 1977-ம் ஆண்டில் வடமுனைப் பகுதியில் குடியமர்த்தியவர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடமுனையில்மட்டுமன்றி அப்பகுதியை அடுத்துள்ள புணானை கட்டுமுறிவு, பணிச்சங்கேணி ஆகிய கல்குடாத் தொகுதியின் எல்லைப்பகுதிகளைப் பாதுகாக்கவும் 1977-ம் ஆண்டின்பின் தமிழ் பேசும் இந்திய வம்சாவளியினரை திரு. தேவா குடியமர்த்தினர்என்றும் கூறப்பட்டது.

இருப்பினும் இப்பகுதிகளில் தமிழ்ப்பேசும் மக்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. ஆகையால் அத்துமீறிய குடியேற்றத்தின் தாக்கத்துக்கு இப்பகுதி மக்கள் ஈடு கொடுக்க முடியாதவர்களாகவுள்ளனர். இதனால் இப்பகுதிகளில் உள்ளவர்களும் தமது இருப்பிடங்களை விட்டு நகரும் நிலை ஏற்பட்டது.

### அகதிகள்

வடமுனையில் குடியிருந்தவர்கள் அங்கு அத்துமீறிய குடியேற்றத்தையடுத்து காணி தவிர்ந்த தமது ஏனைய உடமைகளையும் கொண்டு அகதிகளான நிலையில் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர் அவர்களுக்கு அமைச்சர் தேவநாயகம் உட்பட அரசாங்க அதிகாரிகளால் வெறும் ஆறுதலை மட்டுமே கூற முடிகிறது.

அத்துடன் அவர்கள் இழந்த நிலங்களைப்பற்றி இப்பிரமுகர்களால் ஏதோ வாய்க்கு வந்ததைக் கூறிச் சமாளிக்க மட்டுமே முடிகிறதே தவிர செய்கையால் எதனையும் நிறைவேற்ற முடியாமல் உள்ளது. இத்தனைக்கும் வண. திம்புலாகலவின் கை வடமுனையில் நன்கு ஓங்கியுள்ளது.

### வடமுனைப் பயணம்

வடமுனை செல்வதற்கு இரு பாதைகள் இருக்கின்றன. ஒன்று வெலிக்கந்த என்ற பொலனறுவ தொகுதியிலிருக்கும் மிகச்சிறிய கிராமமூடாகச் செல்வது. மற்றையது மட்டக்களப்பு மாதவனை ஊடாகச் செல்வது.

எனது வடமுனைப்பயணம் வெலிக்கந்த கிராமத்தினூடாக மதுறுஓயாவைக் கடந்து இடம்பெறறது. மட்டக்களப்பிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கு முன்னர் எச்சரிக்கைகள் பலமாக இருந்தன. ஆயினும் அச்சர்சைச்குரிய பகுதியின் நிலைமையை நேரில் காணவேண்டுமென்ற அவா மேலிடவே திட்டமிட்டபடி பயணத்தை ஆரம்பித்தேன்.

### இளைஞர் ஆரிய

மட்டக்களப்பிலிருந்து சுமார் 60 மைல்கள் தூரத்தில் வெலிக்கந்த அமைந்திருந்தது. சரளமாக சிங்களம் பேசத் தெரிந்த ஒரு நண்பர் எனது பயணத்துக்கு தனது ஜீப் வண்டியையும் கொடுத்து தாமும் உடன் வந்தார். எம்முடன் மேலும் நன்கு சிங்களம் பேசக்கூடிய இருவர் கூட வந்தனர்.

வெலிக்கந்த சந்தியில் எமது வாகனத்தை நிறுத்தி நின்ற போது 'ஆரிய' என்ற சிங்கள இளைஞர்அறிமுகமானர். அவர் ஒருபட்டதாரி. எமது நோக்கத்தை மெதுவாக அவரிடம் விளக்கினேம் மிகுந்த அச்சத்துடன். அவரும் எதுவித பதட்டமும் இல்லாமல் எம்மைத் தாமே வடமுனை கூட்டிச் செல்வதாக உறுதியளித்தார்!

> அத்துமீறல் குடியேற்றக்காரர் வடமுனைக்கு டிராக்டரில் சென்று கொண்டிருக்கிறார்கள்! அங்கு வாழ குடிசையொன்று தயாராகிறது!

வெலிக்கந்த சந்தியிலிருந்து எமது ஜீப்வண்டி மதுறு ஓயாவை நோக்கிச்சென்றது. அச்சந்தியில் பொலிஸார் நிற்பதை அவதானித்தேன் ''வடமுனையில் பதட்டநிலை அதிகரிக்காமல் இருக்கும் வகையிலேயே இவர்கள் இங்கு நிற்கிறார்கள் என்று ஆரிய விளக்கினார்.

மூன்றுமைல் நீள பயணத்தின் பின்னர் மதுறுஓயாவைக்காண முடிந்தது. ''இந்த ஆறுதான் வண. திம்புலாகல தேரோவின் ராச்சியத்தின் பிரதான எல்லை. இந்த ஆற்றங்கரையில் வைத்தே வடமுனைபற்றி பேசவந்தவர்கள் சிலரை திம்புலாகலவும், அவரது ஆட்களும் திருப்பிஅனுப்பியுள்ளனர்'' என்றார் இளைஞர் ஆரிய.

### வடமுனை அடைந்தோம்

இதைக் கேட்டதும் இந்த ஆற்றங்கரையுடனேயே எமது பயணம் முடிந்து விடுமோ என்ற ஒருவித அச்சம் நிறைந்த உணர்வு என்னுள் நுழைந்தது.

ஆனால் எனது நண்பர் டக்ளஸ், ''நாம் வடமுனையை பார்வையிடவே போகிறோம். அதைப் பற்றி பேசப்போவதில்லை. எனவே நாம் ஆற்றைக் கடக்கலாம் இல்லையா?'' என்று ஆரியாவைக் கேட்டார்.

''நிச்சயமாக''என்றார் அவர். மேலும் கதையை வளர்க்காமல் எமது 'போவீல்' (Four Wheel) ஜீப் உறுமிக் கொண்டு சுமார்மூன்றடிஉயரத்தில் ஓடிக்கொண்டிருந்த மதுறு ஓயாவை வெட்டிக் கிழித்தபடி வடமுனைக்கரையில் கம்பீரமாக ஏறியது. (தொடரும்)

## கைதடி அகதிகள் முகாமில் இன்று நடைபெறும் பொருட்காட்சி

பல வண்ணப் பொருள்கள் கொண்டு அகதிகளாலே ஆக்கப்பட்ட கைப்பணிப் பொருட்காட்சி இன்று கைதடி அகதிகள் முகாமில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. கண்காட்சிக்காக வைக்கப்படும்பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

இன்று காலை ஆரம்பமாகும் கண்காட்சி நாளை மாலை வரையும் நடைபெறும் கண்காட்சியின் போது விற்பனை செய்யப்படும் பொருட்களின் வருமானம் பொருட்களை உற்பத்தி செய்தவர்களுக்கே வழங்கப்படும்.

கண்காட்சிக்கு வைக்கப்படும் பொருள்களில் பூச்சாடிகள், தலையணை உறைகள், விளையாட்டுப் பொருட்கள், விளக்குகள், உணவுப் [illegible] [illegible]கள், மக்[illegible] [illegible]பிகள், சிறுவர் உடுப்புகள், வா[illegible]கள், வாழ்த்து மடல்கள் என்பன வற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

தென்னிலங்கையில் வன்செயலால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்து முகாம்களில் இருந்து வீணே பொழுது போக்காது ஏதாவது பயன் தரும் முயற்சிகளில் ஈடுபடுவது நல்லது என்பதற்கு கைதடி முகாமில் வசிப்பவர்கள் ஓர் எடுத்துக்காட்டு.

விளையாட்டாகவும் பொழுது போக்காகவும் சில கைவேலைகளை செய்தவர்கள். இன்று தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை எதிர்பார்க்கிறார்கள் என்றால்... பாராட்ட வேண்டியதுடன் அவர்களின் கைகளில் உருவான இப் பொருட்களை நுகரவேண்டியது நம் அனைவரின் கடமை அல்லவா?

700 ற்கும் அதிகமான அகதிகளை பராமரித்து அவர்களுக்

(5-ம் பக்கம் பார்க்க)

# ஏழு சைக்கிள்கள் மீட்கப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

பொதுமககளால் மடக்கிப் பிடித்து ஒப்படைக்கப்பட்ட ஒருவரை விசாரணை செய்த பொலிஸார் விசாரணையில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து ஏழு சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

பெருமாள் கோவிலடியில் சந்தேகத்திற்கிடமான விதத்தில் நடமாடியதாகக் கூறப்படும் நடராசா சாம்பசிவம் அல்லது வெற்றிவேலு என்பவரை பொதுமக்கள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவரை விசாரணை செய்த பொலிஸார் நாச்சிமார்கோவிலடி, சிவன் கோவிலடி பகுதிகளிலிருந்து 7 சைக்கிள்களை மீட்டனர்.

இன்ஸ்பெக்டர் சிறிதரன் தலைமையில் சார்ஜன் ஜோர்ஜ் சார்ஜன் எட்வெட், கன்ஸ்டபிள் பரமேஸ்வரன் ஆகியோரைக் கொண்ட கோஷ்டி சைக்கிள்களை மீட்டது. இவற்றில் 2 சைக்கிள்கள் தொடர்பாக உரிமையாளர் புகார் செய்திருந்தனர் மற்றும் 5 சைக்கிள்கள் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது. (க)

## சத்துணவு தயாரித்தல் திட்டம்

(புலோலி)

இலங்கை குடும்பத்திட்டச் சங்க யாழ் மாவட்டக் கிளை தும்பளையில் பெண்களுக்கான ''சத்துணவு தயாரித்தல்'' பயிற்சி வகுப்பொன்றை நடாத்தவுள்ளது.

இம்மாதம் 31ம் திகதி தும்பளை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இச்சத்துணவு தயாரித்தல் பயிற்சிவகுப்பில்செல்வி டாக்டர் திலகம் பயிற்சிகளை வழங்குவார்.

இப்பயிற்சி வகுப்புக்கான சகல நடவடிக்கைகளையும் இலங்கை குடும்பத்திட்டச் சங்க யாழ் மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு ஏ.வி பூவேந்திரன் மேற்கொண்டு வருகின்றார். (சூ)


KEEN INSTITUTE

மணியம்ஸ் கட்டடம்,

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L $8^{4}_{5}$ க்கான

வார இறுதி இரண்டாம் பிரிவுகள்

ஆரம்பம்: 84 A/L 29-10-83 8 a. m.

85 A/L 30-10-83 8 a. m.

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | — திரு. வரதராஜன் | கணக்கியல் | —திரு. தேவதாஸ் |
| வர்த்தகம் | — திரு. குமார் | இந்துநாகரீகம் | —செல்வி அருள்நங்கை |
| தமிழ் | — திரு. செல்வரட்ணம் | அளவையியல் | —திரு. நவம், கேசவன் |
| | | அரசியல் | —திரு. செல்வரட்ணம். |

விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க பாவியுங்கள் "பாயர்" உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய

"சேர்கோப்பூர்"

450 மி. லீ.—55 ரூபா. 3.25 லீற்றர்—375 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில்

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) "ஹெடோனல் எம். 60%"

450 மி. லீ.—55 ரூபா. 2 லீற்றர்—240 ரூபா.

(2) "ஹெடோனல் எம். 40%"

450 மி. லீ.— 33. ரூபா 50 சதம்

(3) "ஹெடோனல் D. 55%"

250 மி. லீ.—55 ரூபா.

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.

தொலைபேசி : 93563.


## இன்றைய பலன்

ஐப்பசி 11-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(28-10-83)

மேடம்: அன்புக்கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்டதேவதையின் பார்வையும் பதியலாம் தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவுண்டு குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

இடபம்: ஆயுதபீடைக்கும் இடமுண்டு அவசரப் போக்கால் விபரீதங்கள் விளையும் பிரச்னைகள் மேலும் சிக்கலாகும் உணவு விடயத்தில் பிரியக்குறைவு ஏற்படும்.

மிதுனம்: எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சத்தை புண்ணுக்கும் அற்ப விடயத்திற்குக்கூட பொல்லாங்கு கேட்க நேரிடும் தனி வழிப் பயணத்தைத் தவிர்த்து கோபத்தை அடக்கவும்.

கடகம்: இனியவார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள் பொருள் வரவுக்கும்இடமுண்டு சுற்றுடலில் மதிப்பு உயரும் பெரியவர்களே உங்கள் ஆலோசனையைக் கேட்பார்கள்.

சிங்கம்: சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும் எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் சிலருக்கு எதிர்பாராதவிதமாக உடல் நலன் பாதிக்கப்படலாம்.

கன்னி: கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும் அறிஞர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

துலாம்: கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ்பரவும் இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும் தொழில் புரியும் இடத்தில் பாராட்டுக்கள் உற்சாக மூட்டும்.

விருச்சிகம்; மனக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும் அன்பான சகோதரம் ஒன்றின் நிலைமோசமாக இருக்கும் அபாயகரமான காரியத்தைத் தவிர்க்கவும்.

தனு: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள் காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும் பெண்களுடைய வாழ்வில் மகிழ்ச்சி நிலவும்.

மகரம்; கருத்து வேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும் பகைவர்கள் பதுங்குவர் பாதையில் பழுதுண்டு நம்பிக்கை மோசடி மூலம் பணம் பறிபோகலாம் முன்னெச்சரிக்கை நன்று.

கும்பம்: மணவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும் குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும் புதுமனை கட்டுவதற்கு சிலர் ஆலோசிக்கலாம்.

மீனம்: நடுநிலை தவறாது நல்லதைச் செய்வீர்கள் உங்கள் புத்திக்கூர்மை மற்றவர்களை பாராட்ட வைக்கும பழைய நண்பரின் சந்திப்புக் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இன்று...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கான உணவு, உடை, உறையுள் வழங்கிசுகாதரம்கல்விபோன்ற இன்னோரன்ன தேவைகளை பூர்த்தி செய்வதுடன் மாத்திரம் நிற்காமல்;

அவர்களின் திறமைகளையும் தகுதிகளையும் வெளிக்கொணரும் முறையிலும் வருமானத்தை ஈட்ட உதவியாகவும் நிரந்தர புனர்வாழ்வுத்திட்டத்திற்கு வழிசமைக்கும் பொருட்டும் வீட்டுக்குத் தேவையான பல பொருட்கள் அங்கு உற்பத்தி செய்ய வழிசமைத்துள்ளார்கள்.

அகதிகள் முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்த மூன்றுமாதங்களும் வெறுமனே உண்ணுவதும், உறங்குவதுமாக இருந்தவர்களின் எதிர்காலம் என்பது கேள்விக் குறியே?

தொடர்ந்து முகாம்களில் இருக்கக்கூடாது என அரசாங்கமும் தெரிவித்துவிட்டது. தொடர்ச்சியாக வைத்துப் பராமரிப்பதற்குப் போதிய பொருட்களும் இல்லை இந் நிலையில்......

முகாமைவிட்டு வெளியே சென்று எங்கு வாழ்வது? என்ன செய்வது நடுத்தெருவில் நிற்பதா? என்ற ஏக்கங்களினூடே பல அகதிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு ஏங்கிப் பரிதவிக்கும் நிலை கைதடி முகாமில் இல்லையென்றேகூறலாம். இவர்களின் எதிர்காலத்திற் கேற்ற தொழில் பயிற்சிகளை ஏற்படுத்துகின்ற பணியில் அறிவழிப் போராட்டக்குழுவினர் அண்மைக்காலமாக ஈடுபட்டு வந்தனர் அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

ஆடிக்கொடுமைகளை எண்ணி ஏங்குவதனை மறந்து சிந்தனையை தொழில்துறையில் ஈடுபடுத்தி எதிர்காலத்திற்கு களம் அமைக்கும் இவர்களின் பணியை பாராட்டாமலிருக்க முடியாது.

இத்தகைய ஆக்கபூர்வமான முயற்சிக்கு ஆதரவளித்து மூலப்பொருட்களை வழங்கி வரும் அறவழிப்போராட்டக் குழுவின் தலைவர் வி. எஸ். துரைராஜாவும் செயலாளர் க. ஜீவதாசும் முழுநேர ஊழியர்களாக இருந்து முகாமில் அகதிகள் நலன்களை கவனித்து வருகின்றனர். இவர்களுக்கு உதவியாக ச. தங்கராசாவும் மற்றும் பல தொண்டர்களும் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இவர்களின் சுயநலமற்ற சேவையின் பெரும் பயனாகவே இன்றும் நாளையும் நடைபெறும் கண்காட்சி அமைகின்றது என்றால் மிகையாகாது.

— என். கே. துரைசிங்கம்.

## மகாஜனக்கல்லூரி கனிஷ்ட பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஜயரத்தினம் நினைவு நாளும், கனிஷ்ட பகுதிப் பரிசளிப்பு விழாவும் கல்லூரி பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நாளை நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திரு த. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை கலந்து கொள்வார். மற்றும் வட்டாரக்கல்வி அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரம் வாழ்த்துரை வழங்க திருமதி ஜெ. சிமியாம்பிள்ளை பரிசில்களை வழங்குவார்.

புலவர் நா. சிவபாதசுந்தரம் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (சூ)

## சனி ஞாயிறு தினங்களில் வேதாகம வகுப்புக்கள்

(சுண்டுக்குளி)

யாழ். மறை மாவட்டத்திலுள்ள வளர்ந்தோருக்கென வேதாகமவகுப்புக்களை அடுத்த ஆண்டு முதல் சனி ஞாயிறு தினங்களில் நடத்துவதற்கு யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

சங்கத்தலைவர் திரு ஆர். யோசவ் தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் சங்க ஆட்சி மன்ற அலுவலர் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

# ஐ. நா.வில் தி. மு. க. சமர்ப்பித்த மனு!

(நியுயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையில் திராவிட முன்னேற்றக் கழகம், இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக சமர்ப்பித்த மனுவில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

(நேற்றையத் தொடர்ச்சி)

''திட்டமிட்ட கும்பல் ஒன்று ஜூலை 25 காலை கொழும்பில் தமது தாக்குதலைத் தொடங்கியது; அதேவேளையில் நாட்டின் பிறபகுதிகளிலும் திட்டமிட்ட பலகுழுக்கள் வன்முறைகளைத் துவக்கின. தாக்குதல் முறை எங்கும் ஒரேமாதிரியாக இருந்தது. (தமிழர்களைத் தாக்க) தீவிரமாகத் திட்டமிடப்பட்ட சதி ஒன்று இருந்தது என்பதற்கான ஆதாரங்களாகும் இவை!

''ஜூலை 24 அன்று இரவும், நாஜி ஜெர்மனியில் நடந்தது போன்று நிகழ்ச்சிகள் நடந்தன.

ஆம்! ஜூலை 25காலை கொழும்பு நகர் எரிந்துகொண்டிருந்தது; அரசின் ஒரு பகுதி இராணுவத்தார் கொழும்பு நகரெங்கும் சூறையாடிக்கொண்டிருந்தனர். தமிழர்கள் நட்ட நடுத்தெருக்களில் பகிரங்கமாக கூறுகூறாக வெட்டப்பட்டார்கள்; கொல்லப்பட்டார்கள்; ஆனாலும் ஊரடங்கு சட்டம் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை; வன்முறையில் நீங்கள் பங்கெடுக்காதீர்கள் என்றோ— கலகக் கும்பல்கள் வன்முறையில் ஈடுவதைத் தடுத்துநிறுத்துங்கள் என்றோ, இராணுவத்திற்கும் காவல்துறைக்கும் அரசாங்கம் உத்தரவிடவுமில்லை! இவையெல்லாம், (தமிழர்கள் மீது நடந்த தாக்குதல்களுக்கு) உடந்தையாக இருந்தனர் என்பதைக் காட்டும் உண்மைகளாகும்.

''முடிவாக, திங்களன்று பிற்பகல் ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது என்றாலும், அது மதிக்கப்படவில்லை. அரசாங்கத்தினரே ஏற்பாடு செய்த கும்பல்கள், ஊரடங்கு நேரத்தில் தாம் இதுவரை தாக்கியிருக்காத தமிழர்களின் வீடுகளையும் கடைகளையும் தொடர்ந்து தாக்கின; தமிழர்கள் வீடுகளையும் (வணிக) நிறுவனங்களையும் எரித்தன; அவர்களை பின்தொடர்ந்து வந்த 'கொள்ளைக்காரர்கள்' நாசப்படுத்தப்படாமல் விடப்பட்டிருந்தவற்றையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு சென்றார்கள்.

## திட்டமிட்ட இனப்படுகொலை!

ஜூலை 24 அன்று தொடங்கிய வன்முறையில் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்; ஆயிரக்கணக்கானோர் கடுமையாகத் தாக்கப்பட்டனர்; சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் அநேகமாக அனைவரும் தம் வீடுவாசல்களைத் துறந்து ஓடினர்; அகதிகள் முகாம்களிலும் தற்காலிகத் தங்குமிடங்களாக அமைக்கப்பட்ட இடங்களிலும் அநாதைகளாக வாழ்ந்தார்கள்! (மலையகத்தில் தோட்டப் பகுதிகளில் இது நடக்கவில்லை; அங்கே தமிழர்கள் பெருமளவில் சேர்ந்து வாழ்கிறார்கள்.)

''இலங்கை அரசாங்கமும் இந்த இனப்படு கொலையை அதிகாரபூர்வமாக மன்னித்து விட்டது; அரசாங்கத்தின் இந்தப் போக்கும், அது இனப்படு கொலையை பகிரங்கமாக மன்னித்த போக்கும், வன்முறைக் கொடூரங்கள் துவங்கி நான்கு நாள்வரை தாம் பூண்டிருந்த மௌனத்தை முடித்துக் கொண்டு இலங்கைக் குடியரசின் தலைவர் தொலைக்காட்சி மூலம்பேசிய பேச்சின் மூலம் ஒளிவு மறைவு இன்றித் தெரிவிக்கப்பட்டன. அந்தப் பேச்சில், இலங்கை அதிபர்-தமிழர்கள் பட்ட துன்ப துயரங்களுக்கு ஒரு வருத்தம்கூடத் தெரிவிக்கவில்லை; ஒன்றுமறியா ஆடவர்-பெண்டிர், குழந்தைகள் மீது அவர்கள் குறிப்பிட்ட ஓர் இனத்தை அல்லது குழுவைச் சார்ந்தவர்கள் என்பதற்காக நடத்தப்பட்ட தாக்குதல் மனிதாபிமானத்திற்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலாகும்; ஆனாலும் அதைக்கண்டித்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை அதிபர் மாறாக, விடுதலைப் புலிகள் சிங்கள ஆயுதப்படையினர் பதின்மூன்று பேரைக் கொன்றதற்கு இஃது ஒரு பதிலடியே என்று கூறினார்; அரசியற் சட்ட ஆறாவது திருத்தம் என்ற ஒரு கடுமையான சட்டம் வருகிறது- அது பிரிவினைக் கோரிக்கையைக் குற்றமாக்கப் போகிறது என்றும் கூறினார். அந்தச் சட்டம் சுயநிர்ணய உரிமையை மட்டுமின்றி பொதுவாக மனித உரிமையையும் மீறுவதாகும். (ஏனெனில் அந்தச் சட்டத்தின் விதிகள்- பிரிவினை எதிர்ப்பு பிரகடனத்தில் கையெழுத்திடாதவர்கள், சொத்துக்களை இழப்பார்கள்; பாஸ்போர்ட் வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்; அரசாங்கத்தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றெல்லாம் கூறுகிறது) இவ்வளவையும் சொல்லிவிட்டு, தற்போது சிங்கள மக்களை தாஜா செய்வது தமக்கு அவசியமாகிறது என்றும் கூறினார்.

## அடிப்படைக் கடமை

''அதன் மூலம் இனி தாம் மொத்த நாட்டுக்கும் அதிபராகத் தம்மைக் கருதவில்லை. சிங்கள மக்களுக்கு மட்டுமே தம்மை அதிபராகக் கருதுகிறார் என்பதை மொத்த உலகுக்கும் ஒளிவுமறைவு இன்றித் தெரியப்படுத்திவிட்டார். அதன்மூலம் இலங்கை அரசு இனப்படுகொலைக் கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்டது, இனிமேல் தமிழ்மக்களை நாட்டின் ஒருபகுதியினராகக் கருதவில்லை என்பதையும் வெளிப்படையாகச் சொல்லிவிட்டார். அனைத்து நாடுகளையும் கட்டுப்படுத்தும் சர்வதேச சட்டங்களின் அங்கங்கள் என்று நாகரிக நாடுகள் அங்கீகரித்துள்ள உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்திலும் மனித உரிமை ஒப்பந்தங்களிலும் கூறப்பட்டுள்ள பிற மனித உரிமைகளைக்கூட விட்டுவிடுங்கள். (தமிழர்களின்) உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்கவேண்டும் என்ற அடிப்படைக் கடமை கூடத் தனக்கில்லை என்று அவர் ஒளிவுமறைவின்றிச் சொல்லி விட்டார்.

''அதன் - தொலைக்காட்சி உரையின் தொடர் விளைவு என்ன? கடந்த சில நாட்களாக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை அரசாங்கம் ஒளிவுமறைவின்றி அங்கீகரித்துவிட்டது; ஏற்றுக் கொண்டுவிட்டது என்றே அந்தத் தொலைக்காட்சிப் பேச்சை வெறிக்கும்பல் கருதியது; தொடர்ந்து ஜூலை 29 அன்று மறுபடியும் வன்முறைத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டது; அதில் மேலும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

'உதாரணமாக கொழும்பு நகரத் தலைமை ரயில் நிலையத்தில் ஒன்பது தமிழர்கள் எரிக்கப்பட்டனர். அந்த ஒன்பது பேரும் கொடூரமான—அவலமான சூழ்நிலையில் செத்தனர். கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் மேலும் நால்வர் எரிக்கப்பட்டனர்.

## கலகக் கும்பல்கள்

பின்னர் கலகக் கும்பல்கள் வாள்களுடனும் கத்திகளுடனும்...... தமிழர்களைத் தேடிக் கிளம்பின! தம் கண்ணில் பட்ட தமிழர்களைக் கொன்று குவித்தன. கார்களை நடுவீதிகளில் நிறுத்தி தமிழர்கள் என்று தாம் நினைத்தவர்களை கார்களிலிருந்து வெளியே இழுத்துப் போட்டுக் கொன்றனர்.

ஓரிடத்தில் ஒருவர் காரிலிருந்து வெளியே இழுத்துக் கட்டிப் போடப்பட்டார். பின்னர் (அவர்) காரே அவர்மீது ஏற்றி ஓட்டப்பட்டது. மாதா கோவிலில் ஒன்றின் பங்குக் குருவான கத்தோலிக்கத் துறவி ஒருவர் இதற்குச் சாட்சியாவார்.

பின்னர் வன்முறை மலையகப் பகுதிகளுக்குப் பரவியது. குறிப்பாக பதுளை, நுவரேலியா போன்ற இடங்களுக்குப் பரவியது. அங்கே நூற்றுக் கணக்கான தமிழர்கள் தாக்கப்பட்டனர். கொல்லப்பட்டனர். அவர்களது வீடுகளும் கடைகளும் கொள்ளையடிக்கப்பட்டன, தீ வைக்கப்பட்டன. இங்கே இந்த வெறியாட்டம் நடந்து கொண்டிருக்கையில் தமிழர்கள் பகுதிகளிலும், தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் வெடித்தன.

ஜூலை 26 அன்று திருகோணமலையில் உள்ள கடற்படையினர் - அந்தக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரத் தமிழ் மக்கள்மீது தாக்குதல் நடத்தினர். நாடாளுமன்ற உறுப்பினர் (இரா. சம்பந்தன்) இல்லம் மீது நடந்த தாக்குதலும் இதில் அடக்கம்!

(தொடரும்)


# யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

## குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

1. கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும், மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நோர்வேயில் (NORWAY) 1984-ம் ஆண்டிற்கான பாடசாலை அனுமதி பெறுவதற்கும் அது தொடர்பான சகல ஏற்பாடுகளுக்கும் உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

நகல் படிவங்களை;

1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3. சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?

Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-

1. Minolta PPC Photo Copier Model EP 300 78,590-00
2. Minolta PPC Photo Copier Model 300 RE 88,600 00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குறேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்)

படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக்கூடிய இடம்

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்


## விளையாட்டரங்குக்கு ஜனாதிபதி நிதி

(மன்னார்)

எருக்கலம்பிட்டிமத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கு ஒரு லட்சம்ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டது.

இதற்கான நிதியை ஜனாதிபதி திரு ஜே.ஆர்.ஜயவர்த்தன தமது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தார்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தின் போது எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலய அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## அகதிகளுக்கு பாய்கள் அன்பளிப்பு

(புலோலி)

தும்பளை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் புற்பாய்கள் அகதிகளுக்குவழங்குவதற்காகக் கையளிக்கப்பட்டது.

சுமார் 725 ரூபா பெறுமதியான பாய்கள் சங்கத் தலைதர் திரு கே சின்னத்தம்பியினால் திருமதி தேவநேசன் நேசையாவிடம் கையளிக்கப்பட்டது.

(சு)

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.30, 4-15, 7-00
Clint Eastwood in
ANY WHICH WAY
YOU CAN
(Color)
Action Thrill

இதுவே கடைசி வாரம்
**ராஜா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
விரப்பா
சரத்பாபு - சுமனலதா
நடித்த
**திசைமாறிய பறவைகள்**
(புதிய பிரதி)
(சிலதினங்கள் மட்டும்)

**ஸிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-30
30-10-83 வரை
கமல்
ஸ்ரீதேவி **குரு**
7-11-83 முதல்
36th CHAMBER
OF SHAOLIN

2வது ஜனத்திரள் வாரம்!
**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15.
5-00, 7-15
"RAID ON ENTEBBE"
in
**Operation Thunderbolt**
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.

பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் பார்க்கிறார்கள்! நீங்கள் ஏன் இன்னமும் பார்க்கவில்லை? கடைசி வாரமாகவும் பார்க்காதவர்களுக்கு இது ஒரு கடைசி சந்தர்ப்பமாகவும் காட்சியளிக்கின்றது. இன்றே இப்பொழுதே பார்த்து மகிழுங்கள்.
**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
Next:
FROM HERE TO
ETERNITY

## தாய்லாந்து செல்லும் சாரணர்



யாழ். பரியோவான் கல்லூரியின் சிரேஷ்ட சாரணர் குழுத் தலைவரும், சமூகசேவை நெறியாளனுமாகிய செல்வன் ஹரேந்திரன் பாலசுப்பிரமணியம் அடுத்த மாதம் முதலாம் திகதி தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் சிரேஷ்ட சாரணருக்கான உலகஜம்போரியில்கலந்து கொள்ள விருக்கிறார்.

யாழ். பரியோவான் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர வகுப்பில் பயின்றுகொண்டிருக்கும் இவர், இக் கல்லூரியின் சிரேஷ்ட சாரணர் பிரிவில் ஐந்து வருடகாலம் பதவி வகித்துள்ளார்.

தாய்லாந்து நாட்டில் நடைபெறும் ஜம்போரியில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் குழுவின் உபதலைவராகவும், பொருளாளராகவும் நியமனம் பெற்றிருக்கும் இவர் கடந்த 15ம், 16ந் திகதிகளில் கொழும்பு சாரணர் செயலகத்தில் நடைபெற்ற முதலாவது பயிற்சிப் பாசறையில் கலந்து கொண்டார். எதிர்வரும் 27ம், 28ந் திகதிகளில் நடைபெறவிருக்கும் இரண்டாவது பயிற்சிப்பாசறையிலும்இவர் கலந்து கொள்ள விருக்கிறார்.

ஜனாதிபதியின் சாரணர் விருதைப் பெற்ற இவர் ஜம்போரிக்குச் செல்வதற்கு முன்னர் ஜனாதிபதியை ஜனாதிபதி மாளிகையில் சந்திக்கும் சாரணர் குழுவிலும் சேர்ந்து கொள்வார்.

எதிர்வரும் 28ந்திகதி கொழும்பிலுள்ள தாய்லாந்துத் தூதரக அதிகாரியின் இல்லத்தில் ஜம்போரிக்குச்செல்லும் தூதுக் குழுவினரைக் கௌரவித்து இரவு விருந்து அளிக்கப்படும்

இலங்கையிலிருந்து ஐந்து பேரைக் கொண்ட சாரணர் குழுவே ஜம்போரில் கலந்து கொள்ள விருக்கிறது. இக்குழுவின் தலைவராக ஆனந்தாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சுமேந்திராசேரம் தலைமை தாங்குகிறார்.

செல்வன் ஹரேந்திரன் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய மொழிபெயர்ப்பாளர் திரு தி. பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனுவார்.

(கடைசி வாரம்)
**ராணி** (யாழ் நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
**சகலகலா வல்லவன்**

100வது நாளைத் தாண்டி
**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் **துணை**
(கலர்)

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
**கீழ்வானம் சிவக்கும்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
M.G.R. - சரோஜாதேவி
**அன்பே வா**
கலர் — புதிய கொப்பி
Soon
"IT COULD HAPPEN TO YOU"
A Film on V. D.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-02 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-25 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-15 | பொதுநலவாய கலை விழா (விவரணச்சித் திரம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-30 | சிங்கள நிகழ்ச்சி |
| 9-00 | ஆங்கிலத்திரைப் படம். |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | திரைப்படத்தொடர்ச்சி |
| 11-30 | நிகழ்ச்சிகள் முடிவு |

## வான்கள் விற்பனைக்கு

லண்டனில் இருந்து கொண்டு வரப்பட்ட இரண்டு LEYLAND EA 350 வான்கள் விற்பனைக்குண்டு. சனிக்கிழமை காலை 10 மணியிலிருந்து பார்வையிடலாம்.

6, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 9514

## தேவை

டீசல் வாகனங்கள் (அசோக் லேலண்ட்) திருத்தக் கூடிய நன்கு அனுபவம் உள்ள
மெக்கானிக்கும், உதவியாளர்களும் தேவை.
தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் வரவும்.
தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
உரிமையாளர்:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
9542

108, BROWN ROAD, JAFFNA

## A/L 84 இரசாயனம்

ஆரம்பம்: 31-10-83
ஆசிரியர்: சத்தீஸ்
ஒவ்வொரு பிரிவிலும் 4 மணி நேர வகுப்பு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| பிரிவு A திங், வியா. | 4-30—5-30 p. m. | பௌ. இரசாயனம் |
| | 5-30—6-30 p.m. | பொது இரசாயனம் |
| பிரிவு B திங், வியா. | 3-45—4-30 p. m. | பொது இரசாயனம் |
| | 4-30—5-30 p m | பௌ. இரசாயனம் |
| பிரிவு C திங், வியா. | 5-30—6-30 p. m. | பொது இரசாயனம் |
| செவ், புதன் | 5-30—6-30 p. m. | பௌ. இரசயானம் |

9559

### பருத்தித்துறை நகரசபை

## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல் - 1984

1984ம் ஆண்டுக்கான குத்தகைக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படும், 1983-11-15ந் திகதி செவ்வாய்க்கிழமை அட்டவணையில் குறிப்பிட்ட குத்தகைகள் குறிப்பிட்ட இடங்களில் ஏல விற்பனை ஆரம்பிக்கப்படும். குத்தகை ஏலத்தில் கலந்து கொள்ளவிரும்புபவர்கள் குறிப்பிட்ட குத்தகைக்குரிய வைப்புப்பணம் 1983-11-11ந் திகதி பிற்பகல் 3-00 மணிக்குப் பிந்தாமல் அலுவலகத்தில் செலுத்தி தங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### அட்டவணை

| விபரம் | ஏலவிற்பனை வைப்பு | படிவக் கட்டணம் | ஏலவிற்பனை நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1. மரக்கறிச்சந்தை | 1000/- | 50/- | மு. ப. 10-00 மணி தொடக்கம் | மரக்கறிச் சந்தை வடக்குவாசல் |
| 2. வான்வண்டிக்காலை | 1000/- | 50/- | ,, | ,, |
| 3. துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் மக்கள் சந்தை. | 500/- | 25/- | ,, | ,, |
| 4. மீன் சந்தை | 1000/- | 50/- | மு. ப. 11-00 மணி தொடக்கம் | மீன் சந்தை நுழைவாசல் |
| 5 துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் மீன் சந்தை | 500/- | 25/- | ,, | ,, |
| 6. ஆட்டிறைச்சிக்கடை | 500/- | 25/- | ,, | ,, |
| 7. மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 1000/- | 50/- | ,, | ,, |
| 8. மாட்டிறைச்சிக்கடை இல. 2. | 1000/- | 50/- | ,, | ,, |

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை, 25-10-1983.

நா. இராஜகுலம்
செயலாளர்,
நகரசபை, பருத்தித்துறை

9562



# நல்லூர் கல்யாணமண்டபம்: ஒருமாற்றுயோசனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்யாண மண்டபத்தை இந்து விடுதியாக (இந்து லாட்ஜாக) மாற்றுவது தொடர்பாக ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனை தொடர்பான கருத்துக்கள் பொதுமக்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

முன்னாள் மேயர் அ. த. துரையப்பாவினால் இரண்டே கால் லட்சம் ரூபா செலவில் 1976ம் ஆண்டு இந்தக் கல்யாண மண்டபம் கட்டப்பட்டது.

சென்னையிலுள்ள கல்யாண மண்டபங்கள்போல் இதுவும் நடைபெறும் என்ற கருத்தால் கட்டப்பட்டபோதிலும் யாழ்ப்பாணத்தில் கோவில்களிலும், வேறு மண்டபங்களிலும், வீடுகளிலும் திருமண வைபவங்கள் நடைபெறுவதால் கல்யாணமண்டபத்தை நாடுவார் குறைவாக இருந்தனர். இம்மண்டபம் பொதுக்கூட்டங்களுக்கும், நூல்வெளியீடுகளுக்கும் அதிகமாகப் பாவிக்கப்பட்டுவந்தது.

இந்தக் கல்யாணமண்டபத்திற்கு பராமரிப்புச் செலவாக மாதம் 3000 ரூபா போகிறது. 76ம் ஆண்டுமுதல் இரண்டே கால் லட்சம் ரூபாவிற்கான வட்டிவீதம் அதிகரித்துவருகிறது.

இந்தநிலையில் இந்தக் கல்யாண மண்டபத்தை பயன் தரக்கூடிய விதத்திலும், பராமரிப்புச்செலவினத்தை சரிக்கட்டும் விதத்திலும், எப்படி பாவிக்கலாம் என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழ்நாட்டிலும், வெளிநாட்டிலும், மற்றும் தென் பகுதியிலிருந்துவரும் இந்துக்கள் தங்குவதற்கு யாழ் நகரில் ஒரு வசதியான இடமில்லாக் குறையை இக்கல்யாணமண்டபம் மூலம் தீர்க்க ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைதொடர்பான கருத்துக்களை, யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ச)

# 706 ரூபா காசோலை ரூ. 45 ஆயிரமாக மாறியகதை!

## கிளிநொச்சியில் ஒருவர் கைது

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்து சபையினால் அனுப்பிவைக்கப்பட்ட காசோலையொன்று மோசடி செய்யப்பட்ட விபரம் இப்பொழுது அம்பலத்துக்கு வந்துள்ளது!

வடபிராந்திய போ. வ. சபை, நுகேகொடையிலுள்ள நலன்புரிச் சங்கத்திற்கு 706ரூ. 03 சதம் கொண்ட காசோலையை அனுப்பிவைத்தத. இக் காசோலையைக் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருநபர் எடுத்து 45 ஆயிரம்ரூபாவாக மாற்றி அமைத்தாராம். பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கல்யாணி ஸ்ரோஸில் கொடுத்து 13 ஆயிரம் ரூபாவுக்கு நீரிறைக்கும் இயந்திரம் போன்றவற்றை வாங்கிக் கொண்டு மீதி 32 ஆயிரம் ரூபாவை கந்தசாமி என்ற பெயரில் காசோலையாகப் பெற்றுக்கொண்டாராம்.

மீண்டும் அந்த நபர் யாழ் நவீன சந்தை மேல்மாடியில் உள்ள மக்கள்வங்கியில் 32 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை மாற்றுவதற்குக் கொடுத்தபோது, வங்கி உத்தியோகத்தர் அவரிடம் அடையாள அட்டையைக் கேட்டதும், காசோலையை அப்படியே விட்டு, தலைமறைவாகிவிட்டாராம்!

காசோலை மோசடி சம்பந்தமாக யாழ் பொலிஸ் விசேஷ குற்றத்தடுப்பு புலனாய்வு பொறுப்பதிகாரி திரு. ஜி.எஸ், பிள்ளை, கான்ஸ்டபிள் தனபாலசிங்கம் ஆகியோர் மேற்கொண்ட துரித விசாரணையின்பின்னர் கிளிநொச்சியில் வைத்து சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்ததுடன், 13 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கிய நீரிறைக்கும் இயந்திர வகைகளையும் மீட்டுள்ளனர்,

காசோலை மோசடியில் ஈடுபட்டதாகக் கருதப்படும் கந்தசாமி என்பவரின் உண்மையான பெயர் முத்தையா என்றும் அவர் தலைமறைவாகிவிட்டார் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (மா)

யாழ். மாவட்டத்தில்

# 16 கிராமசேவகர்கள் பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 16 கிராமசேவகர்கள் முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கிராமசேவகர்கள் நியமனத்திற்குப் பின்னர் முதல் தடவையாக இப்போதுதான் இப்பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் முதலாம்தர கிராமசேவகர்களாக பதவி உயர்த்தப்பட்டோரும் அவர்கள் பணிபுரியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் வருமாறு:

திருவாளர்கள் வி. கே. தளையசிங்கம் [யாழ்ப்பாணம்], என். கந்தையா [யாழ்ப்பாணம்], கே. கந்தசாமி [நல்லூர்], கே. செல்வரத்தினம் [நல்லூர்], ஏ. சி. ரி. கிருஷ்ணராஜா [கோப்பாய்], கே. எஸ். சோமசுந்தரம் [கோப்பாய்], ஏ. சி. துரைசிங்கம் [கோப்பாய்], வி. சின்னத்துரை [கோப்பாய்], கே. கந்தசாமி [தெல்லிப்பளை], எஸ். எஸ். நடராஜா [தெல்லிப்பளை], கே. பேரம்பலம் [சாவகச்சேரி], பி. ஜே. ராஜா [சாவகச்சேரி], என். கணபதிப்பிள்ளை [நெடுந்தீவு], பி. வேலுப்பிள்ளை [கரவெட்டி], ரி. வடிவேலு [வேலணை], எம். வி. பாலசுந்தரம் ]பருத்தித்துறை].

# மூடப்பட்ட தபால் நிலையங்கள் திங்கள் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலத்தில் நடைபெற்ற கொள்ளைகளினால் பாதிப்புக்குள்ளாகி மூடப்பட்டிருந்த வடபகுதியைச் சேர்ந்த 18 உபதபால் நிலையங்களும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் திறப்பதற்கான நடவடிக்கைகளை வடமாநில தபால் அதியட்சர்கர் திரு. கே. மகேஸ்வரன் எடுத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் வடமாநில தபால் அத்தியட்சகர் இதையும் அறிவித்தார்.

பாதிப்புக்குள்ளான உப தபால் நிலையப் பகுதிகளில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து விழிப்புக்குழுக்களின் பாதுகாப்பு உதவியுடன் இவைமீண்டும் திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கூறினார், (வண்-நிரு)

## இழுவைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருந்த இழுவைப்படகில் காவலுக்காக இருந்த மனோகரன், சுரேஸ், தாய்குல்லா ஆகிய மூவரையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி இராமேஸ்வரம் நோக்கி இழுவைப்படகைச் செலுத்தும்படி கோரினராம்.

பின்னர் இம் மூவரும் படகினை இராமேஸ்வரம்வரை செலுத்திச்சென்றனர் என்றும் இராமேஸ்வரம் கரை வந்ததும் இந்த 15 நபர்களும் தலைமறைவாகிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் கரையில் தற்பொழுது நிற்கும் இப்படகில் தங்கியிருக்கும் மேற்படி 3 காவலாளிகளும் படகில் உள்ள 'வயர்லஸ்' மூலம் பேசாலை தொழிற்சாலையுடன் தொடர்புகொண்டதைத் தொடர்ந்து தொழிற்சாலை உரிமையாளர்கள் படகினை மன்னாருக்கு கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இச் சம்பவம் தொடர்பாக மன்னார்பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து மன்னார் கடற்பிராந்தியத்தில் எந்தநேரமும் முப்படை ரோந்துசுற்றிவருகிறது. [சு[

## சுங்க ஏல விற்பனை இரத்து

1983-10-24ஆந் திகதி ஈழநாடு பத்திரிகையில் வெளியிடப்பட்ட சுங்க ஏல விற்பனையில் - ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் 29-10-83 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறவிருந்த விற்பனை மட்டும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென் பதை பொது மக்களின் கவனத்திற்கு அறிவிக்கின்றோம்.

செ. கணேஸ்
சுங்க சேகரிப்பாளருக்காக
யாழ். மாவட்டப்.

9572

## சனி, ஞாயிறு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு நிலைமை சீரற்றதாக உள்ளதால் இவ் ஆண்டு சங்கம் நடாத்தும் துமறைக்கல்வித் தேர்வை நடத்துவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த மாதம் 19ம் திகதி ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்துவது எனவும் எனவே சங்கக்கிளைகள் இம்மாதம் 31ம் திகதிக்கு முன் கிளைக் கூட்டங்களைத் தெரிவுசெய்ய வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

## அவசர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுவதைத் தடுப்பதற்காக இக்கப்பலிலிருந்து மா, சீனி ஆகிய பொருட்கள் நேரடியாக வடபகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகளுக்கு விநியோகித்து கப்பலின் இறக்குமதி வேலைகளை இரண்டு நாட்களில் முடிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகக் கப்பல் ஏஜென்ஸி நிறுவனமான கே. ஜெயபாலசிங்கம் கம்பனியாரின் பிரதிநிதி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## நாடு முழுவதும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

10 மணிவரை மின்வெட்டை அமுல்படுத்துமென்றும், கிளிநொச்சி மின்சார நிலையம் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணிவரை மின் வெட்டை அமுல்படுத்துமென்றும் அறிவிக்கப்பட்டது. (வெ)

## மாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கியதைத் தொடர்ந்து இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இக்கடிதத்தைக் கொண்டு வந்தபோது மன்னாரில் கைதான திரு. வள்ளுவன் சில தினங்களுக்குமுன் விடுதலை செய்யப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

இக் கடிதத்தில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து யாழ். நகரில் கைதான வர்த்தகர் ஒருவரும் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். (க)

## பலியானோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு நேற்று அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது.

''யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில், ஜூலை 24-ம், 25-ம் திகதிகளில் ஆயுதந்தாங்கிய சீருடையணிந்த சில நபர்கள் நடத்திய வெறியாட்டத்தில் 41 பேர் பலியாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இனங்காணக்கூடிய ஒரு பிரிவினர், வன்செயல்களினால் மரணத்திற்குள்ளாகினர். இதனால், இவர்களில் தங்கியிருந்தவர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

ஜூலை 24-ம், 25-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும், சீருடை அணிந்த ஆயுதம்தாங்கியவர்களால் நடத்தப்பட்ட வெறியாட்டத்தினால் நிலைமை ஏற்பட்டது.

பொலிஸ் அதிகாரிகளின் சிறு விசாரணையின்பின் பலியானவர்களின் சடலங்கள் மரணக்கிரியைகளுக்காக விடுவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்கள் ஆறுதிருப்பதினால் இச் இச்சம்பவங்கள் பற்றி முறையான விசாரணைவைத்து பாதிக்கப்பட்டவரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிரஜைகள் குழுவினர் பலியான 41 பேரின் பட்டியலை தயாரித்துள்ளனர். இப் பட்டியலில் 82 வயதான இளைப்பாறிய ஆசிரியர், 70 வயதான மீனவர், 63 வயதான பாதுகாப்பு ஊழியர், 65 வயதான பென்சனியர், 70 வயதான வர்த்தகர், 45 வயதான கண்டக்டர், 45 வயதான சுருக்கெழுத்தாளர், 48 வயதான லொறி உரிமையாளர், 40 வயதான மனேஜர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பலியானவர்களில் 5 பேர் 19 வயதிற்குட்பட்ட மாணவர்களாகும். மற்றவர்களில் பட்டதாரி பத்திரிகையாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர், குடும்பகட்டுப்பாட்டு அதிகாரி, கிராம சேவகர், வர்த்தகர், தொலைத்தொடர்பு பரிசோதகர் ஆகியோரும் உள்ளனர். (க)

## இலங்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் நியாயமில்லை.

''தமிழ்நாட்டின் சில அரசியல்கட்சித் தலைவர்கள் தமிழ் ஈழம் பற்றிய கருத்துக்களை வலியுறுத்திவருவது, இலங்கையில் தனிநாடு கோரிக்கையைத் தூண்டுவதாக அமையும்.

''இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாக எமது அமைச்சர்கள் மத்தியில் முரண்பாடான கருத்துக்கள் இல்லை. இதுதொடர்பாக அனைவரும் கட்டுக்கோப்புடனேயே இயங்கிவருகிறோம்

''தமிழக அமைச்சரொருவர் இந்தியாவின் ஐ. நா. குழுவில் இடம்பெற்றது இதுவே முதல்தடவையாகும்.

''கலவரங்களினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகளை வழங்க தமிழ்நாடு அரசு என்றும் தயாராகவுள்ளது'' என்றார். [வெ]

## மரண அறிவித்தல்

### கறுப்பன் செட்டியார் மூக்கையா

கொழும்பு ஸ்ரீ திருப்பதி ஏஜன்ஸி பங்காளர் கறுப்பன் செட்டியார் மூக்கையா காலமானார். இவர் சரோஜாவின் அன்புக்கணவரும் ராஜவேல், செல்வரத்தினம், தெய்வநாயகி, ஆகியோரின் அன்புத்தந்தையும் P. அழகுமலைச் செட்டியாரின் மருமகனும் சந்திரன், பழனிவேல், பாலசுப்பிரமணியம், நாகேந்திரன், ஆறுமுகம், ஜோதி, ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு 354, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 9571

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu. Telephone: 22389—24126.